# நன்னடத்தை விதி மற்றும் அறநெறிகள் எதிர்த்தாக்குதல் தடுப்புக் கொள்கை

ETHICS & LEGAL COMPLIANCE | ISSUED: June 1, 2014 – REVISED: April 3, 2024

எதிர்த்தாக்குதல் தொடர்பான பயம் இல்லாமல் எந்த சட்டப்பூர்வமான மற்றும் அறநெறிப் பிரச்சனைகளையும் எழுப்புவதற்கான கலாச்சாரத்தை ஆதரிப்பதற்கு Magna உறுதியளிக்கிறது. Magna, அத்தகைய பிரச்சனைகளைத் தெரியப்படுத்துவதற்காக அதன் பணியாளர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் பலவகை வழிகளை வழங்குவதோடு, அத்தகைய பிரச்சனைகளை நேர்மையாகவும் நல்ல நம்பிக்கையோடும் எழுப்பக்கூடிய பணியாளர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் எதிரான தாக்குதல்களையும் தடைசெய்கிறது.

இக்கொள்கையானது, Magna International Inc. மற்றும் அதன் அனைத்து இயக்கக் குழுக்கள், துறைகள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் மற்ற சர்வதேச செயல்பாடுகளுக்கும் (கூட்டாக "Magna") பொருந்துகிறது. பணியாளர்கள், *தனிப்பட்ட ஒப்பந்ததாரர்கள்,* அதிகாரிகள், இயக்குனர்கள், *சப்ளையர்கள்,* ஆலோசகர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர் உட்பட Magna வின் சார்பாக செயல்படும் அனைவருக்கும் அல்லது Magna உடன் உறவு வைத்திருக்கும் அனைவருக்கும் இக்கொள்கை பொருந்துகிறது.

## அறிமுகம்

சட்டரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த குறைகள் அடையாளம் காணப்பட்டு விரைவாக தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். எந்த பயமும் இல்லாமல் சட்ட மற்றும் அறநெறிப் பிரச்சனைகளை நமது பணியாளர்கள் மற்றும் மற்ற பங்குதாரர்கள் அறிவிக்கக்கூடிய ஒரு பணிச்சூழலை Magna ஆதரிக்கிறது (இதில் தண்டிக்கப்படுதல், விலக்கப்படுதல், பதவிக்குறைக்கப்படுதல், இடைநீக்கம் செய்யப்படுதல், அச்சுறுத்தப்படுதல் அல்லது துன்புறுத்தப்படுதல் போன்றவை அடங்குகிறது). நேர்மையாகவும் நல்ல நம்பிக்கையுடனும் சட்ட மற்றும் அறநெறிப் பிரச்சனைகளைத் தெரிவிப்போருக்கு எதிரான எதிர்த்தாக்குதலை Magna சகித்துக்கொள்வதில்லை.

## தரநிலைகள்

சட்ட மற்றும் அறநெறிப் பிரச்சனைகள் தொடர்பான எந்த நம்பகமான பிரச்சனைகளையும் தெரிவிக்கும்படி தனது பணியாளர்கள் மற்றும் மற்ற பங்குதாரர்களை Magna உற்சாகப்படுத்துகிறது. அத்தகைய பிரச்சனைகளை உடனடியாக முறையாக உறுதிசெய்வது உண்மைநிலைகளை "ஆரம்பநிலையிலேயே" கண்டறிந்து ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுவதைக் கவனித்து சரிசெய்வதற்கு Magna தன்முனைப்பாகச் செயல்பட சிறப்பான வாய்ப்ப அளிக்கும்.

நேர்மையாகவும் நல்ல நம்பிக்கையுடனும் (புகார் அளிப்பவர்) சட்டரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த பிரச்சனைகளைத் தெரிவிப்போருக்கு அல்லது புகார் அளிப்பவருக்கு உதவி செய்யும் ஒரு நபரை அல்லது புகார் அளிப்பவருக்கு உறவினரான ஒருவருக்கு எதிரான எதிர்த்தாக்குதலை (அல்லது எதிர்தாக்குவதாக அச்சுறுத்துவதை) Magna சகித்துக்கொள்ளாது. அத்தகைய குறைகள், அல்லது ஒரு நபருக்கு எதிராக பழிவாங்கும் எந்தவொரு செயலும் செய்பவரைதடுக்கிற அல்லது மட்டுப்படுத்துகிற முயற்சிகள் சகித்துக் கொள்ளப்படாது, மேலும் எந்தவொரு தாக்குதலும் தீவிரமான பிரச்சனையாக எடுத்துக்கொள்ளப்பட்டு, பணியில் இருந்து விலக்குதல் உள்ளிட்ட ஒழுக்க நடவடிக்கைகள் எ'டுக்கப்படலாம் அல்லது Magna உடனான வர்த்தக தொடர்புகள் துண்டிக்கப்படலாம். எதிர் தாக்குதல் உள்ளூர் சட்டங்களின்படி தடைச் செய்யப்பட்டிருக்கலாம் மற்றும் கிரிமினல் குற்றமாக தண்டனைக்கு உட்படுத்தப்படலாம்.

Magna Hotline, மேற்பார்வையாளர் அல்லது மேலாளர், அல்லது மனித வளத் துறையின் உறுப்பினர், சட்ட ஆலோசகர், அறநெறிகள் & சட்ட இணக்கநிலைத் துறை, உள் தணிக்கை அல்லது மற்ற தகுந்த முறைகள் ("அறிவிக்கும் வழிகள்") மூலம் பெயர் குறிப்பிடாத வகையில் எழுப்பப்படும் சட்டரீதியான மட்டும் நெறிமுறை சார்ந்த பிரச்சனைகள் அல்லது வழங்கப்படும் அறிக்கைகள் (பெயருடன் அல்லது பெயரின்றி) அனைத்துக்கும் இக்கொள்கை பொருந்துகிறது. வெளியில் இருக்கும் ஒரு ஒழுங்குமுறை நிறுவனத்திற்கு அளிக்கப்படும் புகார்களும் இந்த கொள்கைக்குப் பொருந்தும்.

## எதிர்த்தாக்குதலின் உதாரணங்கள்

எதிர்த்தாக்குதல் பல வடிவங்களில் இருக்கலாம், நுட்பமான நடவடிக்கை உட்படலாம். சந்தேகிக்கக்கூடிய எதிர்த்தாக்குதல் சம்பவங்கள் கீழே பட்டியலிடப்பட்ட்ட முறைகள் ஒன்றைப் பயன்படுத்தி தெரிவிக்கப்பட வேண்டும் (கீழேயுள்ள "பிரச்சனைகளைத் தெரிவித்தல்" என்னும் பிரிவில் பார்க்கவும்). எதிர்த்தாக்குதலின் உதாரணங்களில் உள்ளடங்கக்கூடியவை:

- பணிகள் அல்லது மணிநேரங்கள் குறைப்பு, சேர்ப்பு அல்லது மாற்றம்
- பணியாளரைச் சங்கடப்படுத்தும் அல்லது அவமானப்படுத்தும் நோக்கத்தில் சொல்லால் அல்லது செயலால் காயப்படுத்துதல்
- உடல்ரீதியாகக் காயப்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல்
- பணிநீக்கம், பதவிப்பறிப்பு அல்லது அதற்கான அச்சுறுத்தல்கள்
- பதவிஉயர்வு மறுப்பு, ஊதிய உயர்வு மறுப்பு, பணி வழங்கல் மறுப்பு, பணி இடமாற்றம் மறுப்பு அல்லது கூடுதல் பணிவாய்ப்புகள் மறுப்பு
- Magna வின் பணியாளர் அட்டவணைக்கு அல்லது Magna வின் இயக்கக் கோட்பாடுகளுக்கு எதிரான பிற செயல்பாடுகள்

## மனிதவள தீர்மானங்கள் மற்றும் ஒத்துழைப்பு

எதிர்த்தாக்குதலாக இல்லாத நியாயமான வணிகக் காரணங்கள் அடிப்படையில் (உதாரணமாக, ஒப்பந்த அத்துமீறலின் அடிப்படையிலான பணியாளர் தீர்வு) மனிதவள தீர்மானங்களை

எடுப்பதற்கு Magna வைத் தடுக்கும்படி இந்தக் கொள்கையில் எதையும் அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது.

சட்டப்படியான மற்றும் அறநெறிப் பிரச்சனைகளும் விசாரணைகளும் பல்வேறு விதங்களில் எப்போதும் சிக்கலானவையே. முக்கியமாக அத்தகைய பிரச்சனைகள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக தொடர்புகொள்ளப்படக்கூடிய அனைத்துப் பணியாளர்கள் மற்றும் மற்ற பங்குதாரர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும், அதன் மூலம் இந்த விவகாரங்களுக்கு Magna-வால் முறையாகவும் சரியாகவும் பதிலளிக்க தேவையான தகவலைப் பெறமுடியும்.

## நிறுவனத்திற்குள் பிரச்சனைகளைத் தெரிவித்தல்[1]

எதிர்த்தாக்குதல் தொடர்பான பிரச்சனைகள் அல்லது பிற சட்ட அல்லது அறநெறிப் பிரச்சனைகளானது, அறிவிக்கும் வழிகளில் ஒன்றின் மூலம் தெரியப்படுத்தப்படலாம் என்பதுடன் குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

Magna வில், நமது மேலாளர்களும் மேற்பார்வையாளர்களும் திறந்த நிலைச் செயல்முறையைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். Magnaவில் உள்ள மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்கள் எளிதில் அணுகக்கூடியவர்களாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும், சட்டப்படியான மற்றும் அறநெறிப் பிரச்சனைகளைத் தீவிரமாகக் கருத வேண்டும், மேலும் அத்தகைய பிரச்சனைகளை சட்டப்படியாக, அறநெறிகளோடு, சட்ட இணக்கநிலையோடு, மனித வளம் அல்லது உள் தணிக்கை மூலம் முறையாகக் கையாள்வதற்கு நன்கு பழக்கப்பட்டிருக்க வேண்டும். Magna பணியாளர்கள் மற்றும் மற்ற பங்குதாரர்கள், தங்களது பிரச்சனைகள் எடுத்துரைக்கப்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியமானதாகும். அத்தகைய பிரச்சனைகள் தகுந்த வகையில், பரிசீலிக்கப்பட்டு முறையாகக் கையாளப்படுவதும்முக்கியமானதாகும். ஒரு பிரச்சனை முதலில் எழுப்பப்படும் போது, விரைவில் அவ்விவகாரத்தை முறையாகக் கவனித்து சரிசெய்யும் பொருட்டு தன்முனைப்போடு பிரச்சனையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

Magnaவின் அறிவிக்கும் அமைப்புகள் மதிப்பளிக்கப்பட்டு எந்தக் காரணத்துக்காகவும் பொறுத்தமற்ற முறையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கு பணியாளர்களும் மற்ற பங்குதாரர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நேர்மையின்றியோ தவறான நோக்கங்களுடனோ (எடுத்துக்காட்டாக, சக ஊழியரை தண்டிப்பதற்கு அல்லது துன்புறுத்துவதற்கு) அறிக்கைகளைப் பதிவுசெய்யும் நபர்களுக்கு பணிநீக்கம் வரையான ஒழுங்கு நடவடிக்கை விதிக்கப்படும் அல்லது Magna உடனான வர்த்தக உறவு துண்டிக்கப்படும்.

## மேலும் விபரங்களுக்கு:

### மேலும் தகவல் அல்லது ஆலோசனைக்கு, உங்களது குழு அல்லது பகுதி சட்ட ஆலோசகர், பகுதிஇணக்கநிலை அதிகாரி அல்லது Magnaவின் அறநெறிகள் துறையின் துணைத் தலைவர் மற்றும் தலைமை இணக்கநிலை அதிகாரி ஆகியோரைத் தொடர்புகொள்ளவும்.

| | |
|---|---|
| Issued: | June 1, 2014 |
| Revised: | April 03, 2024 |
| Next Review: | Q1 2024 |
| Issued By: | Ethics & Legal Compliance |
| Approved By: | Magna Compliance Council |

[1] இந்தப் பிரிவு மேக்னா நிறுவனத்திற்குள் அளிக்கப்பட்ட புகார்களுக்கு மட்டுமே பொருந்தும். மேலே விவாதிக்கப்பட்ட புகரளிக்கும் சேனல்களில் ஒன்றின் மூலம் நிறுவனத்திற்குள் கவலைகளைப் புகாரளிக்க நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். இருப்பினும், சில நாடுகளில், அரசாங்கம் அல்லது ஒழுங்குமுறை ஏஜென்சியின் விசில்-ப்ளோயிங் பொறிமுறையின் மூலம் மீறல்கள் நிறுவனத்திற்கு வெளியே புகாரளிக்கப்படலாம். உங்கள் நாட்டில் சட்டத்தால் அனுமதிக்கப்படும் ஒழுங்குமுறை ஏஜென்சியின் விசில்-ப்ளோயிங் பொறிமுறையைப் பயன்படுத்துவதிலிருந்து இந்தக் கொள்கையில் எதுவும் உங்களைத் தடுக்காது.